# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

***********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*****

முறையீட்டு மனு எண்: 019/2018/பே

ஆணை நாள் 13–05–2019

திரு. ரா. வாஞ்சிநாதன்,
த/பெ திரு ராசுக்காளை,
6–2–37 N, லட்சுமி நகர்,
பெரியார் காலனி,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.–624 208

— முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

-- எதிர் மனுதாரர்.

ஆணை.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பெரியார் காலனி, எண். 6–2–37–N, லட்சுமி நகர் பகுதியினைச் சேர்ந்த திரு.ரா. வாஞ்சிநாதன், என்பவரது 29.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 19/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி பேருந்து நிலைய பழைய கழிப்பறை இடத்தில் தனக்கு தரை வாடகைக்கு இடம் ஒதுக்கப்பட்டதாகவும், தன்னிடமிருந்து முழு இடத்திற்கான வாடகை வசூலித்தாலும் தனக்கு மூன்றில் ஒரு பங்கு இடமே ஒதுக்கப்பட்டு, மீதமுள்ள இடத்தினை வேறொருவருக்கு கூடுதலாக பேரூராட்சி செயல் அலுவலர் ஒதுக்கிவிட்டதாக தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

06.02.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

30.05.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் மற்றும் நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு இப்பொருள் தொடர்பான 12.07.2018 நாளிட்ட விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

06.06.2018 நாளிட்ட நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பழைய கழிப்பறை

இருந்த இடத்தினை கழிவறைக்கு பயன்படுத்த முடியாத நிலை ஆகிவிட்டதால் தரை வாடகை செலுத்தி அனுபவித்து வந்த இடத்தில் குத்தகையின்படி ஒதுக்கப்பட்ட இடம் அளவு மாறுபாடு உள்ளது எனவும், இதனை சரி செய்து தரவேண்டும் என முறையீட்டு மனுதாரர் தெரிவித்ததைத் தொடர்ந்து இது தொடர்பாக முறையீட்டு மனுதாரரிடம் நேரில் விசாரணை மேற்கொண்டதில், குத்தகை மூலம் வழங்கப்பட்ட இடத்திற்கும் அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கும் உள்ள வேறுபாடு தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர் நேரில் பார்வையிட்டு, அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கான வாடகையினை செலுத்தி உரிய முறையில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் குத்தகையில் கண்டுள்ள விவரப்படி இடத்தினை நிர்ணயம் செய்து தரப்படும் என செயல் அலுவலரால் உறுதி அளித்ததின்பேரில், முறையீட்டு மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டு, இது தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அளித்துள்ள புகார் மனு மீது நடவடிக்கை தொடரவேண்டாம் என செயல் அலுவலர், நிலக்கோட்டை பேரூராட்சிக்கு கடிதம் வழங்கியுள்ளதாகவும் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடித நகலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

18.07.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான 19.09.2018 நாளிட்ட விசாரணைக்கு ஆஜராகத் தெரிவித்து நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதார் ஆகியோர்களுக்கு அழைப்பாணையிடப்பட்டது.

அதன்படி 19.09.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தான் 29.01.2018 நாளிட்ட முறையீட்டு மனுவினை சமர்ப்பித்ததாகவும், அப்போதிருந்த செயல் அலுவலர் திரு.முருகேசன் என்பவர் தன்னை அழைத்து இது விஷயமாக பேசியதாகவும், அதற்கு பின்னர் புதிய செயல் அலுவலர் வந்தவுடன் 14.05.2018ல் மேற்படி இடத்தினை நேரில் பார்வையிட்டும், விசாரணை செய்தும் தெரிந்து கொண்டதாகவும், தனக்கு தரைவாடகையாக ஒதுக்கப்பட்ட இடத்திற்கான இட ஒதுக்கீடு மற்றும் ஆண்டு வாடகையினை உரிய வழிமுறையில் பேரூராட்சிக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் மன்ற அனுமதி பெற்று சரியான இடம் மற்றும் தரை வாடகையினை நிர்ணயம் செய்து தரப்படுமென தெரிவித்ததாகவும், இதன் அடிப்படையில் தான் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் கொடுத்துள்ள புகார் மனுவின் மீது மேல் நடவடிக்கை தொடரவேண்டாம் எனக் குறிப்பிட்டு ஒரு கடிதம் கொடுத்ததாகவும், அதற்கு பின்னர் தான் புதிய செயல் அலுவலரை இதுவரை பார்க்கவில்லை எனவும், மேற்படி இடத்தினை ஆய்வு செய்தது புதிய செயல் அலுவலர் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி விசாரணைக்கு நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஆஜராகாததற்கான விளக்கத்தினை 14.09.2018 நாளிட்ட கடிதம் மூலம் (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் உத்திரவின்படி கோவையில் நடைபெறும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான 17.09.2018 முதல் 19.09.2018 வரையிலான கருத்துப்பட்டறையில் கலந்து கொண்டுள்ளதாகவும் மறு விசாரணை நிர்ணயிக்கும் பட்சத்தில் தவறாமல் ஆஜராவதாகவும் தெரிவித்துள்ளார்.

15.02.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் மேற்படி பொருள் தொடர்பான 13.03.2019 நாளிட்ட விசாரணைக்கு உரிய அறிக்கைகளுடன் ஆஜராகத் தெரிவித்து அழைப்பாணை பதிவு அஞ்சல் மூலம் நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

08.03.2019 நாளிட்ட நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது அறிக்கையில், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி பேருந்து நிலைய உரிமம் புதுப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இதன்படி பெரும்பாலான தரை வாடகை கடைகள் அகற்றப்படவேண்டிய சூழ்நிலை உள்ளதாகவும் எனவே ஏற்கனவே உள்ள தரை வாடகை கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தற்போதுள்ள தரை கடைகளை விரிவாக்கம் செய்வதால் பேருந்து நிலையத்திற்குள் மக்கள்

போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறு ஏற்படும் நிலை உள்ளதாகவும் எனவே ஏற்கனவே உள்ள தரை வாடகை கடையின் அளவினை விரிவுபடுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், மேலும் முறையீட்டு மனுதாரருக்கு ஏற்கனவே உபயோகத்தில் இல்லாத கழிவறை இடித்து அப்புறப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட காலியிடத்தில் தான் தரை வாடகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததாகவும், ஆனால் தற்போது பொதுமக்கள் பயன்பாடு கருதி அதே இடத்தில் பொதுக்கழிவறை அமைக்க அனுமதி பெறப்படும் நிலையில் தற்போதுள்ள மனுதாரரின் தரைவாடகை கடை உரிமம் ரத்து செய்யப்பட்டு அவ்விடத்தில் புதிய கழிவறை அமைக்கப்படும் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

02.05.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரருக்கு உரிய பதில் அனுப்பி 07.05.2019க்குள் தகவல் தெரிவிப்பதாக தெரிவித்தார்.

03.05.2019 நாளிட்ட நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் நிலக்கோட்டை பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கான பொது கழிவறைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் தரைகடை வாடகைக்கு ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையினைத் தெரிவித்து முறையீட்டு மனுதாரருக்கு தற்போது பதிலளிக்கப்பட்ட அறிவிப்பின் நகல் இணைத்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் குத்தகை காலம் 31.03.2018 உடன் முடிவடைந்த நிலையிலும், முறையீட்டு மனுதாரருக்கு மேற்கண்டவாறு பேரூராட்சியின் நிலைப்பாடு குறித்து பதிலளிக்கப்பட்டுள்ள நிலையிலும், இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கை கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, மே திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்

1.திரு. ரா. வாஞ்சிநாதன்,
த/பெ திரு ராசுக்காளை,
6–2–37 N, லட்சுமி நகர்,
பெரியார் காலனி,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.–624 208

2.செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.